# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110230

1. District மாவட்டம் : The Nilgiris   PS காவல்நிலையம்: VERC Nilgiris   Year ஆண்டு: 2021   FIR No மு.த.அ. எண்: 05/2021   Date நாள்: 18.10.2021

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 amended as Prevention of corruption (Amendment) Act 2018.   Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Cr. PC.   Sections பிரிவுகள்: 102

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை Prior to 14.15 hrs on 13.10.2021.

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.10.2021   Time : நேரம் 11.30 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ ~~Oral~~ : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 3 km's North west.

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி Assistant Director of Town Panchayat. New collectorate Building, Finger Post. udhagamandalam, The Nilgiris.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B.K. Ravi   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 59   (d) Nationality : நாட்டினம்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Huzur. Sarishtadar. (magistrial)   (g) Address : முகவரி collector office. udhagamandalam, The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① R. Kumaraguru, Assistant Director Town Panchayat, udhagamandalam, Nilgiris. ② R. Natarajan E.O, Jegathala Town Panchayat, ③ M. Manoharan. E.O. Hullical Town Panchayat, ④ R. Manigandan. E.O. Sholur Town Panchayat, ⑤ R. Jayanth Moses. E.O. Bikkatty Town Panchayat, ⑥ R. Nagaraj E.O. Naduvattam Town Panchayat, ⑦ R. Ganesh. J.E. Kilkundha Town Panchayat.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

seperate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.10.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.10.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A. GEETHA LAKSHMI
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE,
VIGILANCE & ANTI-CORRUPTION
UDHAGAMANDALAM,
THE NILGIRIS.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-**

**கனம் நீலகிரி மாவட்ட உதவி அமர்வு நீதிபதி மற்றும் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி, உதகமண்டலம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

இன்று 18.10.2021 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின், நீலகிரி மாவட்ட பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் (பொறுப்பு) திரு.B.K.ரவி அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார்.

அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: இடம்: உதகமண்டலம், நாள்: 18.10.2021. அனுப்புநர் B.K.ரவி, தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் சோதனை - 13.10.2021 ஆம் தேதி நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. பார்வை: நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் A1.No.30/2020, நாள்.13.10.2021. பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி நான் கடந்த 13.10.2021 ஆம் தேதி நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் நடைபெறும் ஊழல் தொடர்பான பணிகளை கண்காணித்துக் கொண்டிருந்தபோது எனக்கு கிடைத்த இரகசிய தகவலில், நீலகிரி மாவட்டம். உதகமண்டலம் பிங்கர்போஸ்ட் பகுதியில் உள்ள நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பேரூராட்சிகளின் உதவி

B.Geethalakshmi 18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

இயக்குநர் அலுவலகத்தில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக நடைபெறும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் பொறியளர்களுக்கான கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களிடமிருந்து ஆயுதபூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள், ஜெகதளா பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு.R. நடராஜன் என்பவர் மூலமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து, அவர்களுடன் நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தை கடந்த 13.10.2021 ஆம் தேதி 14.15 மணி முதல் 19.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது அந்த அலுவலகத்திலிருந்த அலுவலர்களான 1) நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.K.கனகராஜ், 2) ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜன், 3) உலிக்கல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.M.மனோகரன், 4) சோலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.மணிகண்டன், 5) பிக்கட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.ஜெயந்த் மோசஸ், 6) நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜ், 7) கீழ்குந்தா இளநிலை பொறியாளர் திரு.R.கணேஷ் ஆகியோரிடமிருந்த மொத்த தொகையான 80,190/- ரூபாய்க்கு அவர்களால் தகுந்த முகாந்திரம் சொல்லததால் அந்த தொகையான ரூபாய் 80,190/- (ரூபாய் எண்பதாயிரத்து நூற்றுா தொண்ணூறு மட்டும்) விசாரணைக்காக செயல்முறையின்மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், 1) நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7909/2021/I-1, நாள்.12.10.2021, 2) நீலகிரி

Sreegeethalakshmi
18/X/21

<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி</u>

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.டி.11எண்.11440/2021, நாள்.23.08.2021-ன் சான்றொப்பமிட்ட நகல், 3) 13.10.2021 ஆம் தேதிக்குண்டான ஆய்வுகூட்ட வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் (பக்க எண்.316), 4) 13.10.2021 ஆம் தேதிக்குண்டான அலுவலக வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் ஆகியவை விசாரணைக்காக 13.10.2021 ஆம் தேதியிட்ட செயல்முறையின் மூலம் கைப்பற்றப்பட்டது. 14.10.2021 ஆம் தேதி முதல் 17.102021 ஆம் தேதி ஆயுதபூஜை, விஜயதசமி, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமை அரசு விடுமுறை நாட்களாட்தால் மேற்படி தொகையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு இன்று (18.10.2021) அந்த தொகையை திரும்ப பெற்று. 13.10.2021 ஆம் தேதியின் திடீர் சோதனையின்போது தயாரிக்கப்பட்ட செயல்முறையும், செயல்முறை மூலம் கைப்பற்றப்பட்ட 80,190/- ரூபாய் மற்றும் ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். 13.10.2021 ஆம் தேதியில் நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட தொகைக்கு தகுந்த முகாந்திரம் சொல்லாத 1) நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.K.கனகராஜ், 2) ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜன், 3) உலிக்கல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.M.மனோகரன், 4) சோலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.மணிகண்டன், 5) பிக்கட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.ஜெயந்த் மோசஸ், 6) நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜ், 7) கீழ்குந்தா இளநிலை பொறியாளர் திரு.R.கணேஷ் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம். B.K.ரவி 18.10.2021. தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி

18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

மாவட்டம். நகல் மாவட்ட ஆட்சியர், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்பிக்கப்படுகிறது. Submitted, Received the above typed complaint on 18.10.2021 at 11.30 hrs and registered a case in The Nilgiris V&AC Cr.No.5/2021 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC ஒப்பம் B.Geethalakshmi 18-10-2021 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: **Proceedings of the Surprise Check conducted on 13.10.2021 between 14.15 hrs and 19.00 hrs at Assistant Director of Town Panchayat, Addl. Collectorate Building, Finger Post, Udhagamandalam, the Nilgiris District.** முன்னிலை: 1) திரு.B.K.ரவி, தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 13.10.2021-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.B.K.ரவி, ஆகிய நான், மாவட்ட ஆய்வுக்குழு பணியை பார்த்து வரும்போது இன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், பிங்கர்போஸ்ட், கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் அனைத்து திட்டப் பணிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர்களிடமிருந்து ஆயுதபூஜை மற்றும் தீபாவளி பண்டிகைகளுக்காக பேரூராட்சிகளின் உதவி

B.Geethalakshmi 18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

இயக்குநர், ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜன் என்பவர் மூலமாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தை நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் 14.15 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், பிங்கர்போஸ்ட், கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் 'B' பிளாக்கில் 3-வது தளத்தில் எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய அறைகளை கொண்டதாக உள்ளது. எண்.1 என்ற அறை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகமாகவும், எண்.2 மற்றும் 3 ஆகிய எண்கள் கொண்ட அறைகள் அலுவலகங்களாகவும் செயல்பட்டு வருகிறது. எண்.1 அறையில் முதலில் நுழைந்தவுடன் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இருக்கையில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.K.கனகராஜ் என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் மாவட்ட தணிக்கை அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தங்களை அறிமுகம் படுத்திக்கொண்டு அனைவரும் சுய பரிசோதனை செய்த பின்னர் இந்த திடீர் தணிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டனர். பின்னர் அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து அவருடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.2000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் தனது சொந்த பணம் என்று சொன்னார், அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால், அந்த பணம் ரூ.2,000/- விசாரணைக்காக அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அவருக்கு அருகில் இடது பக்கமாக இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த உதவி செயற்பொறியாளர் திரு.சுப்ரமணியம் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை

18/x/21

<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி</u>

செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.560/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க தனது சொந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குப்பிறகு அந்த பணம் ரூ.560/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அமர்ந்திருந்த இருக்கைக்கு நேர் எதிரே இருந்த இருக்கைகளில் முதல் வரிசையில் வலதுபக்கமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.N.மணிகண்டன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,470/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குபிறகு அந்த பணம் ரூ.1,470/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.15,580/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு கொடுக்க இருக்கும் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த கருப்பு நிற சிறிய பேக்கை சோதனை செய்த போது அதில் இந்தியன் வங்கி, கனரா வங்கி, சென்ரல் பாங்க் ஆப் இந்தியா மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகிய வங்கிகளின் காசோலைகள் இருந்தது. மேலும் அந்த அனைத்து காசோலைகளிலும் பணம் பெறுபவருடைய பெயர் திரு.K.சரவணகுமார் என்று இருந்தது. அவற்றின் எண்கள் பின்வருமாறு 1) இந்தியன் வங்கி காசோலை எண்.851554 (நடுவட்டம் பேரூராட்சி - Rs.12,750/-) 2) இந்தியன் வங்கி காசோலை

18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

எண்.492366 (ஓவேலி பேரூராட்சி - Rs.12,750/-), 3) இந்தியன் வங்கி காசோலை எண்.262004 (அதிகரட்டி பேரூராட்சி - Rs.12,750/-), 4) கனரா வங்கி காசோலை எண்.045587 (பிக்கட்டி பேரூராட்சி - Rs.12,750/-), 5) சென்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி காசோலை எண்.031765 (கீழ்குந்தா பேரூராட்சி - Rs.12,750/-), 6) பாரத ஸ்டேட் வங்கி காசோலை எண்.063705 (சோலூர் பேரூராட்சி - Rs.12,750/-). மேற்படி காசோலைகளை பற்றி கேட்க மேற்கண்ட பேரூராட்சிகளுக்கு EVM மெஷின் வைப்பதற்கான தகரப்பெட்டி வாங்கியதற்காக திரு.K.சரவணகுமார் என்பவருக்கு கொடுக்க வேண்டியவை என்றும், தன்னுடைய சொந்த ஊர் கோயமுத்தூர் என்பதால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி தான் அந்த காசோலைகளை கோவை சென்று சம்மந்தப்பட்டவருக்கு கொடுக்க வைத்திருந்ததாக கூறினார். இதைப்பற்றி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் கேட்க அவரும் அவர் கூறியது சரி என்று கூறினார். அதனால் விசாரணைக்குப்பிறகு அந்த காசோலைகள் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கேத்தி பேரூராட்சிகளின் செயல் அலுவலர் திரு.B.நடராஜ் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவருடைய சொந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குபிறகு அந்த பணம் ரூ.350/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வரிசையில் வலது புறத்தில் இருந்த கோத்தகிரி உதவி பொறியாளர் திரு.M.மோகன்ராஜ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.5,140/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தனது பெற்றோர்களுக்கு மருந்து வாங்க

Sd/- 18/x/21

வைத்திருந்ததாக கூறி அதற்குண்டான மருத்துவசீட்டை காண்பித்ததால் அந்த பணம் ரூ.5,140/-விசாரணைக்குபிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு அருகில் வலதுபுறமாக அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த உலிக்கல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.M.மனோகரன் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.6,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் அளித்ததால், அந்த பணம் ரூ.6,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அவருக்கு அருகில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த சோலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.மணிகண்டன் என்பவரை சோதனை செய்ய அவர் தானக முன்வந்து அவருடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.18,650/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடைய மகனின் பள்ளி கல்வி கட்டணத்திற்காக வைத்திருந்ததாக கூறியவர் அதற்குண்டான ஆதாரம் எதுவும் காண்பிக்காததால் அந்த பணம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு கொடுக்கவிருந்த லஞ்சப்பணம் என்ற சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்ததாக இருந்த வரிசையில் முதலில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த பிக்கட்டி செயல் அலுவலர் திரு.ஜெயந்த் மோசஸ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.14,920/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் LIC கட்டுவதற்கு வைத்திருந்த பணம் என்று கூறியவர் அதற்குண்டான ஆதாரம் எதுவும் காண்பிக்காததால், அந்த பணம் பேரூராட்சி உதவி இயக்குநருக்கு கொடுக்கவிருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த

18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

பின்னர் பெயர் விவரம் தெரிந்த நடுவட்டம் செயல் அலுவலர் திரு.R.நாகராஜ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து அவர் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.9,300/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடைய மூக்கு கண்ணாடியை மாற்றுவதற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், அதற்குண்டான மருத்துவரின் சீட்டை காண்பிக்காததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த கீழ்குந்தா பேரூராட்சிகளின் செயல் அலுவலர் திரு.H.ரவிகுமார் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,310/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அது அவருடைய சொந்த பணம் என்றும், ஆயுதபூஜை செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் ரூ.5,310/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த இளநிலை பொறியாளர் திரு.சுரேஷ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.530/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால், பணம் ரூ.530/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கீழ்குந்தா பேரூராட்சி இளநிலை பொறியாளர் திரு.கணேஷ் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.13,240/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் இருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த தேவர்சோலை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு.அப்துல் ஆசாத் என்பவரை

18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய சட்டையிலிருந்து பணம் ரூ.220/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அது தன்னுடைய சொந்த பணம் என்று கூறியதால், பணம் ரூ.220/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த அதிகரட்டி பேரூராட்சி இளநிலை உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரியை சோதனை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.4,160/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி மற்றும் குடிநீர் வரி வசூல் செய்த பணத்தை அரசுக்கு செலுத்த வைத்திருந்த பணம் என்றும் இன்று கூட்டத்திற்காக வந்துவிட்டதால் அரசுக்கு செலுத்தாமல் கையில் வைத்திருந்ததாக கூறியதால், விசாரணைக்குப்பிறகு பணம் ரூ.4,160/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த ஜெகதளா வொர்க் இன்ஸ்பெக்டர் திருமதி.குமுதா என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.3,730/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். விசாரணையில் அந்த பணம் அவருடைய வீட்டிற்கு பெயிண்ட் வாங்க வைத்திருந்த பணம் என்பதால், பணம் ரூ.3,730/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக எண்.2 என்ற அலுவலக அறையில் நுழைந்தவுடன் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த கணக்காளர் திரு.ஆனந்த் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால், விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு நேர் எதிரே வலதுபுறமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த அலுவலக கண்காணிப்பாளர் திரு.மோசஸ் ஆண்டனி என்பவர் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய

13/X/21

**ஊ.த.க.பிரிவ கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.3,090/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க செலவு வாங்குவதற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்தாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த இளநிலை உதவியாளர் திருமதி.மார்கரேட் மெர்ஸி என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.520/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால், விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த உதவியாளர் திரு.பார்த்தசாரதி என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.6,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் ஆயுதபூஜை செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த அலுவலக உதவியாளர் திரு.சுரேஷ்குமார் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.1500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க இன்று ATM-லிருந்து எடுத்ததற்கான கணக்கை வைத்திருந்ததால், அந்த பணம் விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக எண்.3 என்ற அலுவலக அறையில் நுழைந்தவுடன் பின்னர் பெயர் விவரம் தெரிந்த கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த பதிவறை எழுத்தர் திருமதி.அனிதா என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.770/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால், விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதே அறையில் கணினி இருந்த கேபினில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த

18/x/21

<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி</u>

தற்காலிக கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் திரு.ஆனந்த் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய சட்டையிலிருந்து பணம் ரூ.2,560/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க ஆயுதபூஜை செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் ரூ.2,560/- விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அவருக்கு வலதுபுறமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த Data Entry Operator திருமதி.மாலதி என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.170/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க பேருந்து செலவுக்காக வைத்திருந்ததாக கூறியதால், அந்த பணம் விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அந்த அறையில் நின்றிருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த கீழ்குந்தா இளநிலை உதவியாளர் திரு.முரளி என்பவரை சோதனை செய்ய தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.1,140/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க, அவருடைய சொந்த ஊர் சேலம் என்பதால், சாப்பாடு செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், விசாரணைக்குபிறகு அந்த பணம் ரூ.1,140/-அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த அறையிலேயே நின்றிருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த அலுவலக உதவியாளர் திரு.பாலநாதன் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய சோல்டர் பேகிலிருந்து பணம் ரூ.2,710/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடைய சொந்த ஊர் கூடலூர் என்பதால், உதகமண்டலம் நொண்டிமேட்டில் வாடகைக்கு அறை எடுத்து தங்கியிருப்பதால், செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், அந்த பணம் ரூ.2,710/- விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையானது 13.10.2021 ஆம் தேதி 14.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர்

Geethalakshmi
15/x/21

<u>ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி</u>

சோதனையின் போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக அலுவர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் சோதனையில் 1) கணக்கில் வராத பணம் ரூ.80,190/- (ரூபாய் எண்பதாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்), 2) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.7907/2021/I-1 நாள்:12.10.2021, 3) நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.டி11 எண்.11440/2021 நாள்:23.08.2021-ன் சான்றொப்பமிட்ட நகல், 4) 13.10.2021-ஆம் தேதிக்குண்டான சான்றொப்பமிட்ட ஆய்வுக்கூட்ட வருகை பதிவேட்டின் நகல் (பக்க எண்.316), 5) சான்றொப்பமிட்ட 13.10.2021 ஆம் தேதியின் அலுவலக வருகைப்பதிவேட்டின் நகல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையில் இந்த திடீர் சோதனை செயல்முறையில் திரு.B.K.ரவி, தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம், (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.K.கனகராஜ், ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜன், உலிக்கல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.M.மனோகரன், சோலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.மணிகண்டன், பிக்கட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.ஜெயந்த் மோசஸ், நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.நடராஜ், கீழ்குந்தா இளநிலை பொறியாளர் திரு.R.கணேஷ் ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் சோதனை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் லேப்டாபில் தட்டச்சு செய்தார். திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் கணினியில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 18.10.2021-ம் தேதி காலை

B.Geethalakshmi
18/x/21

**ஊ.த.க.பிரிவு கு.எண்.5/2021/AC/NI வழக்கின் தொடர்ச்சி**

11.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2021/AC/NI சட்ட பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 and 102 Cr.P.C.-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரு.80,190/- (ரூபாய் எண்பதாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்) ஆகியவற்றை கனம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

18/x/21
சிறப்பு அலுவலர்
ஊ.த.க. பிரிவு
நீலகிரி மாவட்டம்